
ராஜாவுக்கு
Judgments for the King
நியாயத்தீர்ப்புகள்

72 சங்கீதம்

ராஜாவுக்கு நியாயத்தீர்ப்புகள்
ராஜகுமாரனுக்கு தேவ நீதிகள்
தேவனே கொடுத்திடும்
கர்த்தரே கொடுத்திடும்
ஜனங்களை நீதியோடும் ஏழைகளை நியாயத்தோடும் (2)
விசாரிக்க ராஜாவுக்கு நீரே கொடுக்கணும்
ஜனத்திற்கு சமாதானத்தை நீரே தந்திடணும்

சிறுமைப்பட்டவனை ராஜா நியாயம் விசாரிப்பார்
ஏழைகளின் பிள்ளைகளை அவரே இரட்சிப்பார்
இடுக்கண் செய்பவனை ராஜா நொறுக்குவார்
பலவீனன் எளியவனுக்கு அவரே இரங்குவார் (ராஜா)

சூரியன் சந்திரன் இருக்கும்வரையில் பயந்திருப்பார்கள்
பூமியை நனைக்கும் தூறலைப்போல ராஜா இறங்குவார்
பூமியின் எல்லை வரைக்கும் அவரே அரசாளுவார்
சகல ராஜாக்களும் ராஜாவைப் பணிந்து கொள்வார்கள்
(ராஜா)

வனாந்தரத்தார் ராஜாவை குனிந்து வணங்குவர்
அவருடைய சத்துருக்கள் மண்ணை நக்குவர்
தர்ஷீசின் ராஜாக்கள் காணிக்கைகளைக் கொண்டுவருவர்
சேபாவின் ராஜாக்களோ வெகுமானங்களைக் கொண்டுவருவர்
(ராஜா)

ராஜாவின் நிமித்தம் இடைவிடாமல் ஜெபம் பண்ணப்படும்
எந்நாளும் எந்நேரமும் அவர் ஸ்தோத்தரிக்கப்படுவார்
அவருடைய நாமம் என்றென்றைக்கும் நிலைக்கும்
மனுஷரெல்லாம் அவருக்குள் ஆசீர்வதிக்கப்படுவர் (ராஜா)

If a man has fallen down a well there is no need to stone him.


Judgments
for the King